


**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the Morning Star to:-
**The Manager,**
"Morning Star",
Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 144 JAFFNA, FRIDAY, 16th MARCH, 1984 No. 11

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Inland: Rs. [illegible]/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## The Christian Conference of Asia (CCA)

The Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the J.D.C.S.I. leaves for New Zealand shortly to attend the General Committee Meeting of the CCA from 26th of March to the 2nd of April this year.

## New Bishop of Kurunegala

The Rev. Fr. Andrew Oliver Kumarage, Vicar of the Christ the King Cathedral Kurunegala has been appointed unanimously Bishop of Kurunegala. This position fell vacant after the Rt. Rev. Lakshman Wickramasinghe was called to rest.

The Rev. Kumarage, was born in 1934 the eldst son of Mr. Stephen Kumarage who was serving as Catechist and Mrs. Mary Wickrama who was a 'Bible Teacher'.

Having received his primary education in the village school the young Kumarage entered St. Ann's College Kurunegala where he was a brilliant student and excelled in studies and sports. Kumarage left for India in 1954 and entered Bishop College, an affiliated institution of the University of Calcutta.

The Rev. Kumarage received his first appoinment as the Parish Priest of Havadiwela in the Kegalle District where his parents were engaged in the divine service. He served there for about a decade not only as a religious leader but also as a social worker.

Thereafter he was in charge of Gampola Church and later accepted the position of the Vicar of Christ the King Cathedral at the invitation of the Bishop, Rt. Rev. Lakshman Wickramasinghe.

He went to England in 1977 for post graduate studies in divinity. He entered the Sellyoak College of Divinity affiliated to to the "Birmingham" University.

The Rev. Kumarage returned to Sri Lanka in 1978 and was re-engaged as the Vicar of Christ the King Cathedral at Kurunegala.

## Dossier on houses rented to foreigners

Government is compiling a dossier on houses rented by public servants and corporation officials to foreign missions, diplomatic personnel and other foreigners.

A request for the necessary information has been sent out to all Ministry Secretaries, and heads of other institutions by General D. S. Attygalle, Secretary to the Ministry of Defence.

The communication from the Defence Ministry asks for information on the name of the officer, the location of the house rented, the name of the tenant and the monthly rental. General Attygalle has said the questionnaire duly complete should reach him within the month.

[CDN 27-2-84]

## Shortage of Doctors

There is a 50 per cent shortage of doctors in government hospitals with no signs of an immediate solution to the problem, the Minister of Health Dr. Ranjith Attapattu said.

The total cadre of doctors is 2,200 and the hospital are now being manned by half that number.

To make matters worse, the United Nations Voluntary Program is not prepared to send any more doctors to serve here, Dr. Attapattu said, The shortage of doctors is being caused by the brain-drain of doctors mainly to the Gulf States with about 15 doctors resigning each month.

Another problem facing the Ministry of Health is the pattern of drug usage. Dr. Attapattu said that with every new drug the consultants tend to prescribe them with their juniors following their example with the result that drugs already ordered are piling up and become out of date and spoilt.

*Obituary*

**Mrs. Pushparanee Velupillai**

The death occurred of Mrs. Viola Pushparanee Velupillai wife of the late Dr. G. K. Velupillai of Kalmunai on Tuesday the 7th of Februray after a brief illness. She was the daughter of the late Mr. & Mrs. Thambapillai Selvaratnam of Manipay and the sister of the late Mr. S. Navaratnam, Administrative Officer, Dept. of Education Jaffna.

The funeral took place on Thursday the 9th inst. at her residence in Kalmuni. The Service was conducted by the Rev. S. Thevanasan, Pastor Methodist Church, Kalmunai assisted by the Rev. Miss. Vaithilingam. Jonathan Kulathungam a grand son of hers rendered a Solo and Rev. Joseph, Evangelist paid the tribute. He referred to Mrs. Velupillai as a child of God who truly lived and died in the Lord. He said during his long association with the family he found the deceased a loving mother and that her main desire was that her family should be one that grows in the fear of Lord.

Rev. Thevanesan performed the committal rites at the graveside. She leaves behind her three daughters, Sarojini, Kamala (USA) Vijaya, and a son, Mairurasan (Accountant, Maldives) Son-in-law Dr. Devu Kulathungam, University of Peradenia, Nesan Thurairatnam (USA) and S. Jerome. Manager Rainbow Hotel. Negembo, daughter-in-law. Shantidevi and grand children Niranjan, Jonathan, Tina and Usha and a host of friends and relations.

## IN MEMORIAM

**Kandiah Elizabeth Nallammah**

Entered Glory: 29th March 1970

When the Evening Shadows
kiss the west
There comes a vision so fair
Of an aged form on bended knee
My mother engaged in prayer
When that kneeling form I
seem to see
Her heart before God laid bare
Then I know those tears flow
forth for me
I am mentioned in mother's
prayer.

**Arulpooranam.**

## New director of Usha

Mr. L. Namasivayam Chairman, Rowlands Ltd., has been elected a director of Usha Industries Ltd., to represent the interests of Rowlands which has a substential holding in Usha.

He was elected at the 22nd Annual General Meeting of Usha held on February 20, 1984.

Usha is a leading manufacturer of ceiling fans and sewing machines in Sri Lanka. Shri Ram one of the biggest companies in India is a major shareholder of Usha Industries, along with Rowlands Limited.

## Resident Supervisor for Varany Mission Farm Coconut Estate Project, Palai

We need a person with experience in Coconut Estate Management. Apply with bio-data to,

The Manager,
Varany Mission Farm,
Varany.

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY
OF

**Mr. David Thuraiappah Thissainayagam**

Called to rest on 27-3-82

and

**Mrs. Hilda Beatrice Thissainayagam**

Called to rest on 19-1-56

Affectionately remembered by their loved ones.

Nithy Pathy,
Thampalai,
Atchuvely.

## JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE VADDUKODDAI

### New Admission for — 1984/85

**Technician Courses**

Applications for admission to Technician courses commencing in May 1984 are accepted till *16th April 1984.*

Students of either sex under 20+ age, passed six subjects at the G. C. E. (O/L) with Credit passes in Maths. Science and English can apply. Courses are conducted in English medium.

1. *Technician Certificate* (1½ years) — Fees Rs. 750/- per year
   - (a) Airconditioning & Refrigeration — CGLI — 257
   - (b) Automobile Technology — CGLI — 390
2. *Technician Diploma* (3 years) — Fees Rs. 1000/- per year
   - (a) Electronic & Telecommunication — CGLI — 271
   - (b) Electrical Engineering — CGLI — 803
   - (c) Mechanical Engineering — CGLI — 255
   - (d) Civil & Quantity Surveying — CGLI — 627
3. *Diploma in Computer Programming* (1 year) — Fees Rs. 2000/- per year
   - (a) Computer programming & information processing — CGLI — 747

**Craft Course**

Students who have studied up to G. C. E. (O/L), Physically fit and have aptitude to learn an Engineering Trade is eligible for admission.

Courses are of 1 year duration and conducted in Tamil medium with lessons in English and Engineering Drawing.

| *Course* | *Fees* | *Deposit* |
|---|---|---|
| (a) Welding Practice | 500.00 | 1000.00 |
| (b) Foundry Practice | 500.00 | 500.00 |
| (c) Machine Shop Practice | 500.00 | 200.00 |

Apply on forms available at Office (Rs. 3/-) and send your application to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai before *closing date 16-4-1984.*

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும் ; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 144 ] 16 – 3 – 1984 [ இதழ் 11

## பொறுமையோடே காத்திருப்போம்

லெந்து காலமென்னும் இந்நோன்பு காலம், நம்மை நாமே சோதித்தறியும் காலம். இத்தற்பரிசோதனையில் நாம், நமக்குள் காணும் குற்றங்குறைகளை நீக்கி, நற்பண்புகளை வளர்க்க முயலவேண்டும். இந்நாட்களில் நமக்கு அவசியமான பண்புகளுள் 'பொறுமை' என்பதும் முக்கியமானது.

இன்று நமது சூழ்நிலையை நோக்குங்கால், நாம் பொறுமை இழக்கக்கூடிய பல தீயசெயல்களும், ஏமாற்றங்களும், வன்செயல்களும் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன. தமிழ் மக்களுக்கெதிராக பலவிதமான அக்கிரமங்களும் அட்டூழியங்களும் பல பகுதிகளில் நடைபெறுகிறது. எவ்வித குற்றமும் செய்யாத தமிழர்கள் அநியாயமாக வதைக்கப்படுகின்றனர். தமது உடைமைகளை, தமது அன்பர்களை எதிர்பாராதவகையில் பறிகொடுக்கின்றனர். நிம்மதியற்ற இத்தகைய வாழ்க்கையை இனித்தொடர்ந்து வாழமுடியாதென பொறுமையை இழக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் நமக்களிக்கப்படும் இறைவாக்கு, 'நீடிய பொறுமையுடன் காத்திருங்கள'. இறைவனில் பற்றுறுதி கொள்ளுங்கள், இறுதியில இறைமக்களுக்கே வெற்றி கிட்டும் என்பதே. சிறிது கால ஓய்வின்பின, மறுபடியும் இராணுவத்தினரின் அக்கிரமம் நமது பகுதிகளில் தொடங்கிவிட்டது இராணுவ பலத்தினுல் மக்களின் சுதந்திர வேட்கையைத் தணிக்க முடியாது, தூண்டுவதாகவே முடியும். இது வரலாறு கண்ட உண்மை, அதே வேளையில் சுதந்திரம் வன்செயல்களால, ஆயுதபலத்தினுல் பெறமுடியாது; பெற எத்தனிப்பதும் தவறு என்பதை நாம் வலியுறுத்துகிறோம். அஹிம்சை வழி, நேர்மையான வழி இதனைக் கடைப்பிடிப்போர்க்கே இறைவனின் துணை கிடைக்கும்.

தமிழர்களாகிய நாம் இதுவரை அனுபவித்த துன்ப துயரங்களை இறைவன் கண்டும் காணுதவராய் இருக்கிறரென நாம் நினைக்கப்படாது. இறைவன் அன்று தொட்டு கிரியை செய்து கொண்டுதான் வருகிறார். கூடிய விரைவில் இறைவன் தரும் பலனைக் காண்போம். ஆகவே, பொறுமையுடன் காத்திருப்பதே நமது கடமை. இஸ்ரவேல் மக்கள் பல நூற்றூண்டுகளாக பெருந்துன்பங்கள் மத்தியில் நீடிய பொறுமையுடன், எல்லாம் வல்ல இறைவனில் எவ்வித சந்தேகமுமின்று எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். இதன் விளைவே, அவர்கள் இன்று சுதந்திரமாக வாழச் செய்தது. ஆகவே பொறுமையுடன் காத்திருங்கள்'

பயிரிடுபவனைப் பாருங்கள், அவன் நல்ல விளைச்சலை எதிர்பார்த்து பொறுமையோடு காத்திருக்கிறான். விதைப்பின் காலத்திற்கும் அறுவடை காலத்திற்கும நடுவே நீண்ட இடைக்காலமுண்டு. அறுவடை காணவிரும்பின் குறிப்பிட்ட காலம் வரை காத்திருக்கவேண்டும். அதுபோன்று, நாமும் சோர்ந்து போகாமல் காத்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இறைவனின் பார்வைக்கு ஆயிரம் ஆண்டுகள் ஒரு நாள் போலவும், ஒரு நாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும் காணப்படுகிறது. காலத்தை இறைவன் நோக்குவதுபோல் நாமும் காணப் பழகவேண்டும்.

எந்த நேரத்திலாவது அக்கிரமக்காரரை அழிக்க இறைவனுல் முடியும், ஆனுல் அவர் ஒருபோதும் அவசரப்படுவதில்லை தமது குறிப்பிட்ட வேளை வரும்வரை காத்திருக்கிறார். இறைவன் நமக்காகத் தம்முடைய செயல்களை அவசரமாகச் செய்யமாட்டார். ஆகவே தமக்காகக் காத்திருப்போருக்குத் தகுந்த பலனளிக்கத் தவருத, ஆண்டவரின் அருள் வாக்குகளை நாம் மறக்கப்படாது. கர்த்தருக்காகக் காத்திருப்போர் எவரும் எந்நாளிலும் எந்நிலையிலும் வெட்கப்படுவதில்லை அவர்கள் எவ்வளவேனும் தளர்ச்சியடையார். புதுப் பலமும் புது வாழ்வும் பெறுவது நிச்சயம் இது இறை வாக்கு.

மறுபடியும் தமிழ்ப்பகுதிகளில் பதட்டநிலை காணப்படுகிறது. இருந்தும் மனந்தளராது இறைவனை உறுதியாகப் பற்றிக் கொண்டிருங்கள் நீ திகையாதே, கலங்காதே, நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்கிறார் எல்லாம் வல்ல இறைவன். நாள்தோறும் நம்பிக்கையோடு இறைவனை வேண்டுங்கள். அவர் நம்முடன் இருந்தால் நமது விரோதிகள் நம்மை அழிக்க முடியாது. எதிரிகள் அழிவது நிச்சயம். ஆகவே, மனந்தளராமல் பொறுமையோடு காத்திருங்கள்.

## மரணத்திற்கு அஞ்சாத கிறிஸ்தவ மணிகள்! கிறிஸ்துவுக்காக மரிக்க முன்வந்த மாவீரர் !!

( முற்றொடர் )

தியோடோரா அழகும் இறைமையும் வாய்ந்த பெண். கிறிஸ்துவுக்கென்றுதன்னை ஒப்புக் கொடுத்து அவருக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவள். மாக்சிமினின் பார்வை அவள் மீது பாய்ந்தது. போர்ச் சேவகர் மூலம் சிறைப்பிடிக்கப்பட்டு விசாரணை மண்டபத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டாள்.

'உன் பெயர் தியோடோராவா'? 'ஆம்!'

'இயேசுவை மறுதலித்து பாகானுக்குப் பலியிடச் சம்மதித்துவிடு, உன்னை விட்டு விடுகிறேன்'

'நீ கூட இயேசுக்கிறிஸ்து தான் இரட்சகர் என்று அறிக்கையிடும காலம் வரும். அதற்காகக் காத்திருக்கிறேன்.

'பெண்ணே ...... பேதையைப் போல் பேசாதே! அவன் தெய்வமல்ல ... மனிதன்!

'இல்லை. மனித உருவில் வந்த தெய்வம் அவர்...!'

'அந்த எத்தனை நம்புவது முட்டாள்தனம்'

'அந்த கர்த்தனை விசுவசிப்பதே தெய்வீகம்...'

'இந்த நாயை இழுத்துக் கொண்டு போய் வேசிகளுக்குள்ளே தள்ளுங்கள். போர்ச் சேவகரின் உடல் பசிக்கு இவள் இரையாகட்டும்...

மாக்சிமின் ஆத்திரத்துடன் ஆணையிட்டான்.

'என்ன சிப்போரான்...! இன்று புதிதாக ஒன்று...' அவள் தலையைச் சொறிந்து கொண்டே கேட்பதைப் புரிந்துகொண்ட வேசிகளின் தலைவி,

"வா......புதுசு...... கொஞ்சம் அடம்பிடிக்கும, சமாளித்துக் கொள்...' என்று கூறி அவளை உள்ளே அனுப்பி வைத்தாள்.

மெதுவாக உள்ளே நுழைந்த திதிமு சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துவிட்டு அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட கைகளைமூடி மூழங்காலில நின்று செபித்துக் கொண்டிருந்த தியோடோராவின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

ஸ்... தியோடோரா...! மெல்ல கண் விழித்தாள் அவள்.

'என் பெயர் திதிமு. உன்னைக் காப்பாற்றவே வந்துள்ளேன். பயப்படாதே...எழுந்திரு...' இன்னும் அவளின் உடல் நடுக்கம் குறையவில்லை.

'என்னை நம்பு தியோடோரா. நானும் கிறிஸ்தவன்தான். ஆனுல் உன்னைப்போல் பகிரங்கமாக அல்ல, இரகசியக் கிறிஸ்தவன், என் உடையை நீ போட்டுக்கொண்டு தப்பித்து விடு...ம்...சீக்கிரம்'

ரோம் நாட்டுப் போர்ச் சேவகனுன அவன் தன் உடையைக் களைந்து அவளிடம் நீட்டினுன்.

'தயங்காதே...! விரைவாகச் செயல்படு...!

அறையின் வேறொரு மூலைக்குச் சென்று அவள் தன் ஆடையைக் களைந்து திதிமுவின் போர்ச் சேவகன் உடையைப் போட்டுக்கொண்டாள்.

'ஒன்றுக்கும் பயப்படாதே..! பழக்கப்பட்ட போர்ச் சேவகனைப் போல் நடந்துகொள். வெளியே கொட்டடியில் என் குதிரை நிற்கிறது. தப்பித்துவிடு...'

தியோடோராவின் ஆடைகளைத் தன் உடலில் அணிந்துகொண்ட திதிமு கதவைத் திறந்து அவளை அனுப்பி வைத்தான்.

மறுநாள் காலை திதிமு தியோடோராவின் உடையில் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. சேவகர் அவனைக் கைது செய்து தெருவழியே இழுத்துச் சென்று மாக்சிமினின் முனனுல் நிறுத்தினர். எண்ணற்ற கசையடிகளால் அவனின் உடல் முழுவதும் கன்லிப்போய் இருந்தது. கோபாவேசமாக அமர்ந்திருந்தான் மாக்சிமின்.

'அந்த எத்தனின் கூட்டத்தைச் சேர்ந்தவனு நீயும...? ஆம்... கிறிஸ்துவின் இரகசியப் பக்தன் நான்...'

'இதைச் சொல்ல வெட்கமாக இல்லை உனக்கு...?' 'இப்போதேனும் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத் தைரியம் எனக்கு வந்ததையிட்டு இறைவனுக்கு நன்றி...... 'இந்தப் பன்றியின் தலையைச் சீவி எறியுங்கள்' கட்டளை பிறந்ததும் சேவகர் அவனை நெருங்கினர்.

'கொஞ்சம் பொறுங்கள்...' தூரத்தில் ரோம் நாட்டுப் போர்ச் சேவகன் உடையில் நின்றுகொண்டிருந்த தியோடோரா பேரரசன் மாக்சிமின் இடம் வந்தாள்.

'நான்தான் தியோடோரா... என்னைக் கொல்ல ஆணையிடு...!'

'சாவதற்குக் கொஞ்சம் கூட பயமேயில்லையா உங்களுக்கு...?

'இரட்சகரை முகமுகமாகத் தரிசிக்கப் போகிறோமே என்ற மகிழ்ச்சிதான் எங்களுக்கு...!'

ஒரு கணம் மலைத்துவிட்டான் மாக்சிமின். அவன மனதில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது.

'இவர்களை விடுவிடுவது ஆபத்து என்று முடிவெடுத்த பேரரசன் இருவரையும் ஒரே நேரத்தில் சிரச்சேதம் செய்யுமபடி ஆணையிட்டான.

ஆதாரம்; டாக்டர், சவிரிராயன் எழுதிய 'திருச்சபைப் பிதாக்கள்'' (சி. எல். எஸ். பதிப்பு)

### லெந்துகால தற்பரிசோதனைக்குரிய கேள்விகள்

என் வீட்டில் ?

1. என் வீட்டில் கிறிஸ்து தலைவராயிருக்கிறாரா?
2. என வீட்டில் குடும்ப செபம் ஒழுங்காக நடைபெறுகிறதா?
3. என் வீட்டில் செப அறை இருக்கிறதா?
4. என் வீட்டில் உள்ளவர்களுக்குத் தனித்தனியாக வேதம் உண்டா?
5. என் வீட்டைச் சுத்தமாய் வைத்திருக்கிறேனு?
6. என் வீட்டில் அனைத்திற்கும் ஒரு ஒழுங்கு உண்டா?
7. என் வீட்டில் வரவு செலவு கணக்கு எழுதப்படுகிறதா?
8. என் வீட்டில் அன்பு, சந்தோஷம், சமாதானம் நிலவுகிறதா?
9. என் வீட்டில் ஆவிக்குரிய பக்தி நூல்கள் உண்டா?
10. என் வீட்டில் தசம பாகக் காணிக்கைப் பெட்டி இருக்கிறதா?

## மாணவர்களை நல்வழிப்படுத்துக

"நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு மாணவ சமுதாயம் நல்வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

மாணவர் கல்வி கற்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டுமே தவிர அரசியலில் ஈடுபடக் கூடாது. வாழ்க்கைக்கு வேண்டிய பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு ஆங்கிலக்கல்வி மிக முக்கியமான தாகும் என பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவில், அனுரதபுரம் மேல்நீதி மன்ற நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி குறிப்பிட்டார்.

---

## ஒநேஸ்மஸ்

(முற்றொடர்)

நாடகம் : V. Gunaratnam
வி. குணரத்னம்

பாத்திரங்கள் :

| | |
|---|---|
| பிலேமோன் | யோயாக்கீம் |
| அப்பியாள் | மஞ்சே |
| ஒநேஸ்மஸ் | தமாரா |
| பவுல் | |

Act II — காட்சி — 2.

இடம் - பிலேமோன் வீடு
(பிலேமோன் வாங்கிய அடிமையை அழைத்து வருதல்.)

நேரம் - பிற்பகல்.

**பிலேமோன்** — (கதவில் தட்டுகிறார்.) அப்பி — (சற்று உரத்து) அப்பி. இதோ கையுடனே கூட்டி வந்தேன் ஒரு அடிமையை. நல்ல வேளை நான் கொஞ்சம் கூடப் பணம் எடுத்துச் சென்றது. அல்லாவிடில் அந்த ஒட்டக வியாபாரி இவனை வாங்கிச் சென்றிருப்பான். கேட்டாயா கதையை? நான் இவ்வளவு பணம் கொடுத்து வாங்கியபின்பும் இந்த அடிமை தன் தாயின் முன்தானையைப் பிடித்தவண்ணம் — என்னுடன் வரமாட்டேன் என்று குளறி அழுதான், கொடுத்தேன் ஒரு சவுக்கடி — கதறிக்கொண்டு வந்தான் என் பின்னே.

**அப்பியாள்** :— அதுகளின் கொழுக்கு அப்படித்தான். அதுகளுக்குப் பணத்தின் பெறுமதி தெரிந்தால்தானே? பணமென்றால் ஏதோ மரத்தில் பிடுங்கி எடுக்கின்ற பொருள் என்று நினைத்திருக்கும். — (சற்று வெறுப்புடன்) என்னவாம் அவன் பெயர்? டேய் என்னடா உன் பெயர்?

**பிலேமோன்** : பெயரைச் சொல்லடா அம்மாவுக்கு. (அடிமை வாய் பேசாது திருதிருவென்று விழித்தல்). சரி அவன் பேசான — நான் பேசுகிறேன். அவன் பெயர் — ஒநேஸ்மஸ்.

**அப்பியாள்** — விசித்திரமான பெயராக இருக்கு. பெயரைப் பார்த்தால் இவன் நீக்ரோ போலவிருக்கின்றது. நீக்ரோ வருக்கு இருக்கிற தந்திரம் உபாயம் எல்லாம் இவனிடமும் இருக்கக்கூடும் — கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் — (ஒநேஸ்மஸை சற்று உற்றுப் பார்த்து) இவன் கண்களைப் பாருங்கள் — இப்போது ஆளைப் புரிகின்றதா?

**பிலேமோன்** :— அப்பி — நீ தப்பான அபிப்பிராயம் கொண்டுவிட் இவன் அவ்வளவு மோசமானவன் அல்ல. இவனுடைய சூழ்நிலை இவனை இந்தக் கோலத்திற்குள்ளாக்கிய து. எங்களுடைய சூழலில் — அதாவது நாங்கள் அன்பும் ஆதரவும் காட்ட இவன் திருந்தி நல்ல ஒரு ஊழியக்காரனாக வரக்கூடும். — (Philosophically) ஒரு மனிதனை நல்லவன் ஆக்குவதும் கெட்டவன் ஆக்குவதும் சமுதாயமே.

(தொடரும்)

---

### திருச்சபைக்கு இருக்கவேண்டிய பத்துக் காரியங்கள்

(எபே. 4ı 1—5)

1. ஒரே மேய்ப்பன் — (யோ. 10ı16)
2. ஒரே தலை (கிறிஸ்து) — (எபே. 5ı23)
3. ஒரே சரீரம் — (ரோ. 12ı4,5; எபே. 2:16)
4. ஒரே இதயமும் ஒரே மனமும் — அப். 4:32; 2:46; I கொ 1ı10
5. ஒரே விசுவாசம் ஒரே கர்த்தர் — (எபே. 4:5)
6. ஆவியாயிருத்தல் — (I கொ. 6:17)
7. ஒரே வழி — (எரே. 32ı38, 39; யோ. 14:6.)
8. ஒரே வாசல் — (யோ. 10ı9)
9. ஒரே ஞானஸ்நானம் — (எபே. 4:5)
10. ஒரே பெயர் (நாமம்) (எபே. 3ı 14:15)

---

நூல் விமர்சனம் :

## யாழ்ப்பாணக் கல்லூரி வரலாறு

(ஆங்கிலம்)

ஆக்கியோன் : பேராயர் எஸ். குலேந்திரன்
சமர்ப்பணம் : வண. ஜோன்பிக்னெல்
பிரசுரம் : யாழ். கல்லூரி பரிபாலனச் சபை

— எ. எஸ். கனகரத்தினம் —

இந்நூல் ஆசிரியர் புகழ் படைத்த பழைய மாணவர் மட்டுமல்ல: கல்லூரி பரிபாலனச் சபையின் உறுப்பினருமாவர். 57 வருடங்களின் வருடாவருட நிகழ்ச்சிகளின் தொகுப்பு 316 பக்கங்களில் அடக்கப்பட்டுள்ளது. படிப்போருக்கு சுவையூட்டும் வகையில் இது எழுதப்பட்டுள்ளது.

கல்லூரி வரலாற்றின் சகல அம்சங்களும் கொண்ட நூல் இது. ஆய்வுச்சிறப்புடைய புள்ளி விபரங்கள், ஆசிரியர் குழுவினர், புகழ் பெற்ற பழைய மாணவர்கள், வெள்ளிவிழாக் கண்டவர்கள், விளையாட்டு வைபவங்கள், பிரியாவிடைகள், பரிசளிப்புகள், மறைந்தவர் விபரங்கள், மற்றும் சமயோசித சம்பவங்கள், எதிர்பாராத இடங்களில் நகைச்சுவை ததும்பும் வகையில் வரையப்பட்டுள்ளன.

ஆண்டவனுக்காக எந்நேரமும் பணியாற்றும் பொருட்டு, கிறிஸ்தவ குருமார் பக்திசிரத்தையுடன் சாதித்திருக்கும் விடயம் நூல் முழுவதிலும் விரவிக்கிடப்பதைக் காணமுடிகிறது. மிகத் தொலைவிலிருந்து இங்கு வந்து எம்முடன் ஒருவராய் வாழ்ந்து, ஒரு சிறு அளவிலாவது எமது பண்பட்ட வாழ்வுக்கு ஒளி ஊட்டிய அமெரிக்க மிஷனரிமார் வரிசை இந்நூலில் பிரபல இடம் பெற்றுவது.

**அரிய முயற்சி**

பழைய மாணவர்களில் ஒருவரான பிஷப் குலேந்திரன் ஒருவரே இந்தக்கடினமான முயற்சியை இவ்வளவு திறமையாகவும் நேர்த்தியாகவும் செய்திருக்க முடியுமென எனக்குப் படுகின்றது.

தமது கல்லூரியின் சமயப் பணிகளில் ஆழமாக மூழ்கிக் கிடக்கும் அதேவேளையில் உற்சாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் இப்பணியில் ஈடுபட்டிருப்பது மெச்சத்தக்கது. பழைய ஆவணங்களையும், பழைய உதயதாரகை, கல்லூரி சஞ்சிகை ஏடுகளையும் புரட்டிப் பார்த்து, குறிப்புகள் எடுத்து, இந்த அருமையான சரித்திரத்தைப் படைத்திருக்கிறார்.

பிஷப் குலேந்திரன் 80 வயது நிரம்பிய மனிதர் என்பதையும், இந்த வயதில் அனேகமானவர்கள் குறைந்த வேலையையும் கூடிய ஓய்வையுமே நாடுவார்கள் என்பதையும் நினைக்கும்போது, அபிமானம் அதிகரித்து அதிசயம் உருவாகின்றது.

இந்நூலில் ஏராளமான ஆண்களும் ஒரு சில பெண்களும் தோற்றமளிக்கின்றனர் அக்காலத்தில் அவர்களுடன் நேரிற் பழகிய எம்மிற்பலர், நூலில் இவர்களை இனங் காணும்போது மெய் சிலிர்க்கின்றது.

**ஆசிரியரின் தியாகம் :**

ஆசிரியர்கள் எவ்வித சாதாரணமானவர்களுங்கூட, அன்புடன் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் ஒன்றுபட்ட ஆக்கமே யாழ். கல்லூரி. ஒரு கல்லூரியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும், அதன் தலைவரும் மற்றும் ஆசிரியர்களும் ஆற்றிய தியாகச் சேவையைப் பொறுத்தே அமையும், இந்த உண்மை நூலில் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. யாழ். கல்லூரியின் கீர்த்தி அதன் ஆசிரிய குழாமின் வரலாற்றில் வெளிப்படுகிறது.

**பிக்னெல் நினைவு வெளியீடு :**

இந்த நூல், அதிபர் பிக்னெல் அவர்களின் நினைவு வெளியீடு. அந்த மாமனிதன் மக்கள் மனதைப் பறித்திருந்த மாயமும், அவருடைய செல்வாக்கின் மகிமை பற்றிய குறிப்புகளும் நூலில் ஆங்காங்கே மிளிர்கின்றன. அவருடைய வாழ்வையும் பணியையும், ஆட்சிபுரிந்த நோக்கங்கள் பற்றிய ஆழமான விமர்சனம் 72—74 ஆம் பக்கங்களில் காணப்படுகிறது. அவருடைய ஆளுமை, குணம், மேதாவிலாசம் ஆகியவற்றின் பின்னணியில் உருவான கோட்பாடுகளின் ஒரு அழகிய தொகுப்பினைக் கொள்வலாம்.

**இனிய முடிவு :**

இவ்வரிய நூலுக்கும், எமக்கும் ஒரு உந்து சக்தியாகத் திகழும் பேரதிபர் பிக்னெல் அவர்களுக்கு புகழ்பாடும் வகையில் நூலின் இறுதிப்பகுதி இசைநலத்தின் உச்சத்தை எட்டுமளவிற்கு மிளிர்கின்றது.

(சுருக்கம் : — நன்றி: ஈழநாடு)

---

இந்திய சமுதாய மாற்றம்:

## வர்க்கமா ? வர்ணமா ?

மோகன் லால்பீர்

சமுதாய மாற்றம் என்ற வேள்வியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளவர்கட்குப் பெரும் அறைகூவலாக உள்ளன இன்றைய இந்தியாவில் பெருகிவிட்ட சாதிக் கலவரங்கள். சமுதாய நலத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடையே இருவேறுபட்ட கருத்தினை ஏற்படுத்தியுள்ளது. சாதி என்ற போர்வையில் வர்க்கமே இருந்து வருகிறது. சாதியின் பெயரால் நடைபெறும் போராட்டத்தை அப்படியே வளரவிட்டால் அது எதிர்காலத்தில் ஒடுக்கப்படும் மக்களிடையே பிளவினை ஏற்படுத்திவிடும். எனவே இப்போக்கினை வர்க்கப் போராட்டமாக மாற்றுதல் அவசியம், அதுதான் பலன்தரும் வழி என ஒரு பிரிவினர் வாதாடுகின்றனர். மற்றொரு பிரிவினர் இந்தியாவில் அங்கங்கே சாதியின் பெயரால் நடைபெறும் கொடூரங்களை எடுத்துக்காட்டி, அதிலும் குறிப்பாக 'தீண்டாமை' என்ற கொடிய நோயைப் பற்றிக் கூறி இதை முழுமையாக சாதிப் போராட்டமாகவே காணுதல் வேண்டும் என்கின்றனர். இன்றைய இந்தியச் சூழலில் சமுதாய மாற்றத்திற்கு எந்த வாதம் பொருத்தமுடையது என்பதைக் காண்போம்.

சமுதாய அமைப்பின் அடித்தளம் பொருளாதாரமே. சமூகத்தில் ஒரு புரட்சிகர மாற்றம் ஏற்பட, இப்பொருளாதாரத்திற்குக் காரணமான இரண்டு வர்க்கங்களின் மோதலே அடிப்படையாக இருக்கும். பொருளாதார அமைப்பின் செயல்பாட்டிற்கு இன்றியமையாத வர்க்கமே அரசியல் அமைப்பிலும் மேலோங்கி இருக்கும். நிலப்பிரபுத்துவ அமைப்பின் அழிவுக்கு பூர்ஷ்வா வர்க்கம் காரணமாக இருந்தது போலவே, முதலாளித்துவ அமைப்பின் அழிவிற்கு உழைக்கும் வர்க்கம் காரணமாக இருக்கும் என்ற கார்ல்மார்க்ஸின் கணிப்பினை அப்படியே ஏற்று இந்தியச் சூழலுக்கும் வர்க்கப்போராட்டமே தான் மாற்றத்தினைக் கொணரும் என்கின்றனர் மார்க்ஸிய மரபுவாதிகள்.

இந்தியச் சூழல் இத்தகைய முழுமையான வர்க்கப் பார்வைக்கு ஏற்புடையதாக இல்லை. இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு அன்று இது வளர்ந்து வரும் நாடு. மார்க்சின் வாதத்தின்படி முதலாளித்துவம் மேலோங்கி இருக்கும் போது வர்க்க இடைவெளி அதிகமாகும்போது பல முழுமையான மாற்றத்திற்கு வாய்ப்புண்டு. இந்திய முதலாளிகள் அனைவரும் மார்க்ஸின் 'முதலாளி' என்ற கருத்துகோளிற்குப் பொருந்தமாட்டார்கள். இன்னும் சிறு முதலாளிகளாகவேயுள்ளனர். தனித்து நின்று ஏகபோக முதலாளிகளாக பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியற்றவர்கள்.

(தொடரும்)

---

## யாழ். அரச அதிபர்

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதை தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு தந்தி அனுப்பியுள்ளது. இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்திலுள்ள வேறு பல சங்கங்களும் ஜனாதிபதிக்குத் தந்திகள் அனுப்பியுள்ளனர்.

EDITORIAL

## The 'Big Matches'

The 'Big matches' in our schools are in grim focus as we write these notes.

Sixteen persons are reported to have been injured, including a school Prefect on the final-day of a Big Match recently. A Police Constable too, it is said, has been warded

It is difficult to say if this bleak aspect of school life in Sri Lanka, is a sampler of the current situation in the country or the current situation in the country is a sampler of a disconcerting aspect of school life in which Cricket, once 'a school of discipline' has lowered precipitously in recent years.

But the enthusiasm displayed by parents and school children in the big matches belie the theory that Cricket has lost its old values.

We know the extent of the preparations made on the domestic front in our homes for the big matches.

Short eats are made in abundance to satisfy the gorgeous appetites of the young for a whole day. Flags and crochets are got ready overnight. Discarded tins and buckets are salvaged from the backyards, to produce the highest decibel count of noise.

Finally when the match is in progress, sisters in the family, note to their chagrin, their brothers, in the school tent, sporting their (sisters') old crumpled uniforms, complete with the school tie

All these are exhilarating and pleasing traditions so old that they seem engraved in time. No big match has been complete without such a backdrop of clean fun and frivolity.

But today the Big Match faces the stigma of ribaldry, hooliganism and even violence exhibited by a rabble which include, it is reported some old students of the two schools engaged in the encounter.

The stigma stems perhaps from a not too healthy tradition in some of our schools where games are given an all too important a place in the school, not as a vehicle for imparting values but a means of improving the image of the school.

It should be borne in mind that the discipline that games as Cricket impart can only be meaningful if students (later the Alumni) view the games they participate in, in the context of the totality of disciplines they have to submit themselves to, to be worthy citizens of the country

In this context, it is a poignant reminder to us that during the 'Black Week' of the July riots of 1983, in Sri Lanka the darkest news that the national dailies reported was that, according to police reports, many among the looters and marauders all over the country were school students in their teens.

Dr. D. T. Niles whom we have oft quoted in these columns, used to say during the hey-day of denominational schools that the Sports Master in a school is the best Evangelist, thereby succinctly implying that appointments to that post should always be made with great care and sense of responsibility [Dr. D. T. Niles was himself a head of a school at that time.]

Rabid cricket fans who have a transient status in our society today are often the products of schools where school banners flap and snap at big matches but without any reference to what they (the banners) stand for.

"It takes pygmies to destory and giants to build" said Mirabeau It needs 'giants' in our schools to undo the work of 'pygmies' and restore to Cricket the elegance traditionally associated with the game.

## Prof. Eliezer Award

*Professor Christie Jayaratnam Eliezer* retired in December 1983 and in recognition of his many and varied accomplishments and services to society, La Trobe University, Victoria, Australia, intends to establish an Award in his name, to be presented to one or more students in the Department of Applied Mathematics.

During a career spanning five decades and four continents, Dr. Eliezer has lived a full life as a Christian and as a scientist, scholar, writer, public speaker, barrister, administrator, broadcaster and community leader.

**Research Interests**

He has worked with great men like Paul Dirac and Homi Bhabha in his research fields of Relativity and Quantum Mechanics. His other research interests have included Inequalities and functional Equations, and more recently Lie Symmetries in Classical and Quantum Mechanics.

Dr. Eliezer 's early training at Hartley College and University College (Ceylon) and his later studies in the University of Cambridge he won the 1951 Royal Exhibition. the Isaqc Newton award and the Charles L Mayer award of the United States Acadamy of Science. He held a Fulbright Scholarship while on a visit to Princeston Institute for Advanced Studies He was also a Fellow of Christ's College, Cambridge. from 1946—49.

Next he took up an appointment as Professor of Mathematics in the University of Ceylon where he was to spend a further 10 years. During the time he was for a period Dean of the Faculty of Science. He was also, for two years, Vice-President of the YMCA in Colombo.

He has attended the United Nations 'Atoms for Peace' Conference at Geneva (1955, 1958) and the International Atomic Energy Commission at Vienna (1958)

In 1959 he was appointed to the Chair of Mathematics in the University of Malaya, where he served as Dean of Science, and as a Deputy Vice-Chanceller for four years.

While in Kuala Lumpur, Dr. Eliezer became President of the Rotary Club and Vice President of the YMCA.

In 1968, he and his family moved to Australia where he became the first Professor of Applied Mathematics at the newly founded La Trobe University in Melbourne. During his fifteen years at La Torbe University, Dr. Eliezer has served for two periods as Dean of the School of Physical Sciences and has acted as Deputy Vice-Chancellor. He has been much involved in the activities of the Ceylon Tamil Association of Victoria which elected him President, and more recently Patron of the Association.

**Much appreciated**

His work over the years in broadcasting is well known and much appreciated. He was responsible for several radio programmes on Radio Ceylon, and Radio Malaysia on religion, science and community matters. and lately has been compere of Melbourne's 3EA Radio. Tamil programme. For relaxation he enjoys a game of bridge or chess, whilst on the turf he has an occasionel flutter or sometimes a game of golf.

It is felt that many of Dr. Eliezer's colleagues, former colleagues, students and friends would wish to acknowledge his substantial contributions towards Mathematics Science, Peace, Education and Religion by playing a part in the setting up of a Professor C. J. Eliezer Award. Contributions to the fund could be sent to Finance Branch, La Trobe University, Bundoora, Victoria, Australia 3083. Cheques should be made out to La Trobe University, Professor C. J. Eliezer Fund. Contributions are tax deductible in Australia. A full receipt will be forwarded.

*Tamil Times London*

## Chief Librarian Retires

*Mrs, Nalini Colonne*, M. A., a former teacher was the first Sri Lankan to be appointed as Chief Librarian of the British Council which post she has held in 1976 She first joined the Council as Assistant Librarian in 1959 and now retires after 25 years as a Librarian.

She is a graduate of the University of Ceylon and obtained her M. A. (History) Degree at the University of Texas, USA.

## Aid group talks vital for Lanka

Finance and Planning Minister Ronnie de Mel has left on an Aid Mission which will take him to the United Kingdom, France, Germany and Sweden.

He will meet leading members of the governments in these countries with a view to mobilising support for Sri Lanka at this years Aid Group Meeting which will be held in Paris in June.

It is also understood that he will be visiting the United States and the Netherlands in April when he attends the IMF and the World Bank meeting in Washington and the Asian Development Bank meeting in Amsterdam which will be held during the month April. This years Aid Group Meeting is considered by all concerned to be crucial for Sri Lanka's future economic development program for several reasons.

* This is the 1st April Aid Group Meeting after the ethnic disturbances last year and resistance from aid organisation in several countries has still to be overcome.

* The present aid climate in the world is unfavourable.

* The absence of a satisfactory agreement at the moment between the Sri Lanka government and the IMF is also considered a minus factor at the Aid Group Meeting.

[Sunday Observer 26-2-84.]

Information has been received from the Mission Board Office in New York that Dr. Carl Phelps expired on February 2nd 1984. The information seems to have been sent to the Board Office by someone casually associated with Dr. Phelps during his illness and no home address of any relative was given.

The announcement says "he died as he had lived......... He was a gentle, pleasant person, doing what he could to be helpful. He regularly swept quite a large area in and near 'Boys' Town', and when he went walking, he always walked fast so that he wouldn't forget where he was going". Dr. Phelps, some of you may remember, was a Missionary at Jaffna College and was a well known efficient Sports Master and Physical Director.

He and his daughter were the Chief Guests at the 150th College Anniversary Sports Meet in 1973. When he left Jaffna College he was Principal of the Kodaikanal School. Please convey this information to others who may remember Dr. Phelps.

A R. KADIRGAMAR.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 16th March, 1984, and published by Mr. Alfred Mathuranayagam Brodie of Jaffna College Flats, Vaddukoddai.